பக்கங்கள் 17+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 26 வெள்ளிக்கிழமை 10.01.2025 | அதிர்வு 162

## உதயங்க வீரதுங்க பொலிஸாரால் கைது



ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க மிரிஹான பொலிஸாரால் இன்று வெள்ளிக்கிழமை

03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டத்தில் உள்ளூராட்சி சபைக்குப் பெரும் பங்கு

## மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் அரச சேவையை உருவாக்க வேண்டும் என்று வடக்கு ஆளுநர் வலியுறுத்து



“ஜனாதிபதியின் எண்ணக்கருவில் முன்னெடுக்கப்படும் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு முக்கிய பங்கிருக்கின்றது. அதைச் சிறப்பாகச் செயற்படுத்த வேண்டும். மக்கள் நம்பிக்கை வைக்கும் அரச சேவையை உருவாக்க வேண்டும்.”

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

02▶

## மதவாச்சியில் அடிகாயங்களுடன் பெண்ணின் சடலம்



(கி.வசந்தன்)

மதவாச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுவெல மயானத்துக்கு அருகிலுள்ள குழியில் நேற்று மாலை பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று மதவாச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

30 முதல் 40 வயதுக்குட்பட்ட பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இருப்பினும், அவரது சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

மேலாடை மற்றும் லெக்கின்ஸ் ஆகிய ஆடைகளை மேற்படி பெண் அணிந்துள்ளார். அத்துடன் பெண்ணின் அருகில் இருந்த பையில் இருந்து கொழும்பில் இருந்து மதவாச்சிக்கு இ.போ. சபை பஸ்ஸில் பயணித்த சிட்டை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

பெண்ணின் உடலில் பல அடிகாயங்கள் காணப்படுகின்ற நிலையில், இதுவொரு கொலை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீதிவானின் விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக உடல் அனுராதபுரம் மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக மதவாச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# பருத்தித்துறை பொது மரக்கறிச் சந்தை திறப்பு விழா

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பருத்தித்துறை பொது மரக்கறிச் சந்தை இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 45 மில்லியன் ரூபா செலவில் இந்தச் சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை நகர சபையின் செயலர் திருமதி தாரணி கஜரூபன் தலைமையில் நடைபெற்ற



இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்துகொண்டனர்.





## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**'கிளீன் ஸ்ரீலங்கா'**

"உள்ளூராட்சி மன்றங்கள் பெற்றுக் கொள்ளும் வருமானங்களைத் தமது பிரதேச மக்களின் வாழ்வாதார உள்ளிட்ட ஏனைய மேம்பாடுகளுக்குச் செலவு செய்யவேண்டும். அதைவிடுத்து அதனை நிரந்தர வைப்பிலிட்டு சேர்த்து வைத்துக் கொண்டிருக்கக்கூடாது." – என்றும் அவர் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பருத்தித்துறை பொது மரக்கறிச் சந்தை இன்று வெள்ளிக் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 45 மில்லியன் ரூபா செலவில் இந்தச் சந்தை நிர்மாணிக் கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் செயலர் திருமதி தாரணி கஜரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், "ஒதுக்கப்படும் நிதியை உரிய காலத்தில் செலவு செய்து முடிப்பதென்பது எமக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கின்றது. ஆனால், இந்தக் கட்டடத்தை மிக நேர்த்தியாக உரிய காலத்தில் நிறைவேற்றிய ஒப்பந்தக்காரருக்கு நன்றி." – என்று தெரிவித்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் நா.வேதநாயகன் தனது உரையில்,

"பௌதீக வளங்களின் முன்னேற்றம் என்பது அபிவிருத்திக்கு இன்றியமையாதது. அதேபோன்று தனித்து பௌதீக வளங்களின் முன்னேற்றம் மாத்திரமும் அபிவிருத்தியாகிவிடாது. எங்களின் சேவையை மேம்படுத்தும்போதுதான் அபிவிருத்தி முழுமையடையும். எனவே, மக்களுக்குத் தரமான, அன்பான, விரைவான சேவையை வழங்க முன்வரவேண்டும்.

தற்போது எமக்குள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நகர சபையின் செயலர் ஆகியோர் இளையவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் உத்வேகத்துடனும் துடிப்புடனும் செயலாற்றுகின்றனர்.

இந்தப் பொதுச் சந்தைக்குரிய காணியைக் கொள்வனவு செய்து கட்டடம் அமைத்து இன்று மக்களுக்குக் கையளிக்கின்ற சபையின் செயலரையும் பணியாளர்களையும் பாராட்டுகின்றேன்.

இதேபோன்று திறம்பட பணியாற்றுவதுடன் எதிர்காலத்தில் இந்தப் பொதுச் சந்தையை பராமரிப்பதிலும்தான் இதன் வெற்றி தங்கியிருக்கின்றது." – என்றார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன், பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் நகர பிதா யோ.இருதயராஜா, பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ.சா.அரியகுமார், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க மற்றும் வர்த்தகர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# அரச பணியாளர்களின் நடத்தையில் மாற்றம் வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் அறிவுறுத்து










அரச பணியாளர்களின் நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் ஊடாக மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

“கிளீன் ஸ்ரீலங்கா” திட்டம் தொடர்பில் வடக்கு மாகாண அலுவலர்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு வடக்கு மாகாண பிரதம செயலர் அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலர் திருமதி சாரதாஞ்சலி மனோகரன் கலந்துகொண்டு, “கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத் திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்களை வழங்கியதுடன், அரச அலுவலர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

இதன் பின்னர் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், “கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டம் ஜனாதிபதியால் தொடக்கி வைக்கப்பட்டது என்பதையும் இந்த அரசின் அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு என்றும் குறிப்பிட்டார்.

மக்களின் சேவைகளை விரைவாகவும், தரமாகவும், அன்பாகவும் வழங்குவது அரச பணியாளர்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பு எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், அந்த மாற்றத்தை அரச பணியாளர்களின் நடத்தையில் ஏற்படுத்துவதன் ஊடாகச் செய்ய முடியும் என்று குறிப்பிட்டார்.

மேலும், இந்த நடத்தை மாற்றங்கள் உடனடியாகச் செய்யக் கூடியவை எனக் குறிப்பிட்ட ஆளுநர், 2025ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் இந்த மாற்றங்களை ஏற்படுத்தும் ஆண்டாக மாற்றுவோம் என்றார்.

# கிளிநொச்சி விபத்தில் வயோதிபர் உயிரிழப்பு

கிளிநொச்சி ஏ – 9 வீதியில் கந்தசாமி கோயிலடியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, கணேசபுரத்தைச் சேர்ந்த குமரேஸ்வரன் யோகலிங்கம் எனும் 75 வயதுடைய நபரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

யாழ். பருத்தித்துறையில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த அரச பஸ்ஸ/டன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## உதயங்க வீரதுங்க...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டுள்ளார்.

அயல் வீட்டில் வசிக்கும் நபர் ஒருவரைத் தாக்கிக் காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கடலில் நீராடச் சென்ற வெளிநாட்டுப் பிரஜை நீரில் மூழ்கி உயிரிழப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, பாசிக்குடா கடலில் நீராடச் சென்ற ரஷ்ய நாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர் கடல் அலையால் இழுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது என்று கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

ரஷ்ய நாட்டைச் சேர்ந்த 65 வயதுடைய ரூக் கரிசன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

ரஷ்ய நாட்டில் இருந்து இலங்கைக்குச் சுற்றுலா பயணம் மேற்கொண்ட மேற்படி நபர் சம்பவ தினமான இன்று காலை பாசிக்குடா கடலில் நீராடியபோது கடலில் மூழ்கி தத்தளித்துக் கொண்டிருந்தபோது அங்கு இருந்த கடற்படையினர் உடனடியாகச் செயற்பட்டு அவரை மீட்டுக் கரைக்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கல்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பண்பாட்டுப் பெருநாள்களிலாவது மட்பாண்டங்களைப் பயன்படுத்துவோம்

## பொங்கல் பொதிகள் வழங்கும் நிகழ்வில் ஐங்கரநேசன்

தைப்பொங்கல் மதங்களைக் கடந்து தமிழ் மக்கள் அனைவராலும் கொண்டாடப்படுகின்ற ஓர் பண்பாட்டுப் பெருவிழா. இயற்கையைப் போற்றுகின்ற இவ்விழாவில் இயற்கைக்கு இசைவான மண்பானைகளிலேயே தொன்று தொட்டுப் பொங்கல் இடம்பெற்று வந்துள்ளது.

ஆனால், வசதி கருதி மண் பானைகளைத் தவிர்த்து அலுமியப் பானைகளில் பொங்கும் போக்கு எம்மிடையே அதிகரித்துள்ளது. அலுமியப் பாத்திரங்களை முற்றாகத் தவிர்க்க இயலாது போனாலும் தைப்பொங்கல் போன்ற பண்பாட்டுப் பெருநாள்களிலாவது மட்பாண்டங்களைப் பயன்படுத்துவோம்.

இவ்வாறு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை (09) இடம்பெற்ற பசுமை இயக்கத்தின் மண்பானைப் பொங்கல் பொதிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் உரையாற்றுகையில்,

அலுமினியம் பாரம் இல்லாத ஒரு உலோகம் என்பதால் கையாள்வதற்கு சுலபமானது. உலோகம் என்பதால் இலகுவில் வெப்பத்தைக் கடத்தி சமையலை விரைந்து முடிக்க வல்லது. வளைந்து நெளிந்தாலும் ஒருபோதும் உடைந்துவிடாது, விலையும் மலிவானது. இவை போன்ற காரணங்களால் சமையல் அறைகளில் மண் பாத்திரங்களைப் புறந்தள்ளி அலுமினியம் இன்று கோலோச்சுகின்றது. அலுமினியப் பாத்திரங்களில் உணவு சமைக்கும் போது அலுமினியம் உணவுடன் கலப்பதைத் தடுக்கும் பொருட்டுப் பாத்திரத்தின் உட்பகுதியில் அலுமினியம் ஒட்சைட்டுப் படலம் இடப்படுகிறது.

அலுமினியப் பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவும்போது அலுமினியம் ஒட்சைட்டு தேய்வடைந்து உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விடுகிறது. மேலும், சமைக்கப்படும் உணவுப் பொருளின் அமில, கார இயல்பு சேர்க்கப்படும் உப்பு, சமைக்கும் வெப்பநிலை என்பன வற்றைப் பொறுத்து அலுமினியம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து உணவுடன் கலப்பது அறியப்பட்டுள்ளது.



உணவுடன் உடலில் கலக்கும் அலுமினியம் மூளை நரம்புகளைப் பாதிப்பதோடு ஏற்கனவே சிறுநீரக நோயுடையவர்களின் சிறுநீரகங்களை மேலும் பாதிப்படையவும் செய்கிறது என ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

மட்பாத்திரங்கள் அவற்றின் மேற்பரப்பில் இயற்கையாகவே உள்ள நுண்ணிய துவாரங்கள் ஊடாக வெப்பத்தைப் பரவி உணவைச் சீராக வேக வைக்கிறது. மெதுவாகவே சூடுபடுத்துவதால் உணவில் போசணைப் பொருள்களின் அழிவு தவிர்க்கப்படுகிறது. மண் கார இயல்பு கொண்டதால் உணவில் அமிலத் தன்மையை நடுநிலைப்படுத்துகிறது.

சமைக்கும்போது மண்ணிலிருந்து கனியுப்புகள் உணவுடன் கலப்பதால் உணவு கூடுதல் போசணைப் பெறுமானம் பெறுகிறது. இவற்றோடு, உணவின் வாசனையுடன் மண் வாசனையும் சேர்ந்து உணவுக்குக் கூடுதல் சுவையும் கிடைக்கிறது.

எல்லாவற்றையும் விரைவாகச் செய்துவிட வேண்டும் என்று நினைக்கும் நாம் உடல் ஆரோக்கியத்தைப் பேண வேண்டிய சமையலையும் அவ்வாறே விரைந்து முடிப்பதற்காக உலோகப் பாத்திரங்களை நாடியுள்ளோம். இதன் விளைவாக நோய்க்கும் ஆளாகி வருகிறோம்.

மட்பாண்டங்களுக்கு உடனடியாகத் திரும்புதல் இயலாததாக இருக்கலாம். எனினும், தமிழ் மக்களின் இயற்கையைப் போற்றும் தைப்பொங்கல் போன்ற பண்பாட்டுப் பெருநாள்களிலாவது மண்பானைகளில் பொங்குவோம். இது நலிவடைந்துள்ள மட்பாண்டக் கைவினையர்களது வாழ்வையும் வளப்படுத்தும்.– என்றார்.

தைப்பொங்கலைமுன்னிட்டுத்தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் அரியாலை, புத்தூர், நல்லூர் பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு மண்பானைப் பொங்கல் பொதிகளை வழங்கியுள்ளது.

நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை (09) பொங்கல் பொதிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாகப் பின்னடைவைச் சந்தித்துள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கும் அற்றார் அழிபசி தீர்த்தல் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

கொரோனாப் பெருந்தொற்று ஏற்பட்ட காலப்பகுதியில் இருந்து பகிர்ந்துண்டு வாழ்வோம் என்ற கருப்பொருளில் இடம்பெற்று வரும் இத்திட்டத்தின் தொடர்ச்சியாகவே பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதி அனுசரணையை அமரர் பொ. பரமேஸ்வரனின் பிறந்த நாள் நினைவாக அவரது குடும்பத்தினரும் கனடாவில் உள்ள இலங்கை முன்னாள் வர்த்தக சங்கத்தினரும் வழங்கியிருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் திருமதி பராசக்தி பரமேஸ்வரன் கலந்து கொண்டு பொங்கல் பொதிகளை வழங்கினார்.



### இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில்

# தமிழராய்ச்சி மாநாட்டுப் படுகொலை; 51 ஆவது ஆண்டு நினைவேந்தல்!

(எஸ்.நிதர்ஸன்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 51 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று காலை அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழராட்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் அதன் பதில் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது உயிரிழந்த ஒன்பது உறவுகளின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது .

இதனபோது வடமாகாண அவைத் தலைவரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவருமான சி.வி. கே. சிவஞானம், முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் சர்வேஸ்வரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன், யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் ஆர்னோல்ட், இலங்கை தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வாக்குறுதி வாய்ச் சவடால்!

''ஊழல், மோசடி, இலஞ்சம் மற்றும் நிதி மோசடி தொடர்பான எந்தவொரு விசாரணையையும் அரசு நிறுத்தவில்லை. அந்த விசாரணைகள் எவையும் அரசிய லாக்கப்படவில்லை. ஒன்றரை மாதங்கள் விடா முயற்சியுடன் செயற்பட்டால் ஊழல், மோசடி, இலஞ்சம், நிதி மோசடி தொடர்பான விசாரணைகளில் நாடு எதிர்பார்த்த பலனைப் பெற முடியும்.''

- இப்படிப் பொதுப் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போது தெரிவித்தார் என்று செய்தி வெளியாகியி ருக்கின்றது.

ஊழல், மோசடி, இலஞ்சத்துக்கு எதி ராக நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம். அது நாட்டு மக்களுடன் அரசு செய்துள்ள உடன்பாடு என்றும் அவர் சுட்டிக்காட்டியி ருக்கின்றார்.

ஒன்றரை மாதம் என்பது அப்படி ஒன்றும் நீண்டகாலம் அல்ல. பெப்ரவரி மாதம் முடிவடையும் வரை காத்திருக்கும் நாடு அப்போது கேள்வி எழுப்பும். ஒன்றரை மாத்தத்துக்குள் ஏதோ வெட்டிப் பிடுங்கப் போகின்றார் என நாட்டு மக்களுக்கு நாடாளுமன்றத்தில் வாக் குறுதி அளித்தவர் அப்போது என்ன செய்யப் போகின்றார் - அல்லது சொல்லப் போகின்றார் - என்பதைப் பார்க்கலாம்.

தேர்தலுக்கு முன்னர்தான் நாட்டு மக்களுக்கு இந்த ஆட்சியாளர்கள் வாக்கு றுதிகளை அள்ளி வீசினார்கள் என்று பார்த்தால், அரசின் ஒவ்வொரு அமைச் சரும் தேர்தலுக்குப் பின்னரும் - அதி காரத்துக்கு வந்த சொற்ப காலத்துக்குள் - தத்தம்பாட்டுக்கு இப்படி வாக்குறுதி களைத் தாராளமாக அள்ளி வீசிக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

அந்த வகையில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்காரவும் தம்பாட்டுக்கு ஒரு வாக்குறுதியை அள்ளி வீசியிருக் கின்றார்.

'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் நீதியை நிலைநாட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பல்வேறு காரணிகளால் தாமதப்படுத்தப்பட்டுள்ள வழக்குகள் முறையாக விசாரிக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம். - என்று அவரும் நாடாளுமன்றத்தில் சூளுரைத்திருக் கின்றார்.

''சட்டத்தின் பிரகாரம் உரிய நடவ டிக்கை எடுக்கப்படும். பல்வேறு காரணி களால் தாமதப்படுத்தப்பட்டுள்ள வழக் குகள் முறையாக விசாரணை செய்யப் பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி யைப் பெற்றுக் கொடுப்போம்.''- என்று அவர் உறுதியளித்திருக்கின்றார்.

அதிகாரத்தில் இருப்போர் தமது அரசி யல் நலன்களுக்காக இவ்வாறு வாக்குறுதி களை அள்ளி வீசுவதும், பின்னர் அவை காற்றில் கலந்து மறைந்து போவதும் வழமை. இது இலங்கை மக்கள் நீண்ட காலமாக கண்டு வரும் அரசியல்வாதிக ளின் வாய்ச் சவடால்தான்.

ராஜபக்ஷக்களின் அரசு விழுந்து, நல் லாட்சி அரசு அதிகாரத்துக்கு வந்த போதும் இதுபோன்ற வாக்குறுதிகள் அள்ளிவீசப் பட்டன. ஆனால் நடைமுறையில் எதுவும் நடக்கவில்லை. மக்கள் ஏமாந்தமைதான் மிச்சம்.

கோட்டாவின் அரசு வீழ்ந்து ரணில் விக் கிரமசிங்க அதிகாரத்தைப் பெற்ற போதும் கூட இவ்வாறு வாக்குறுதிகள் வாரி வழங் கப்பட்டன. ஆனால் எதுவும் நடக்கவில்லை.

யுத்தகாலத்தில்தமிழ்ஊடகவியலாளர்க ளுக்கும் ஊடகங்களுக்கும் எதிராக கொடூ ரமாக கட்டவிழ்ந்த வன்முறைகள் குறித்து விசாரித்து, நீதியை நிலைநாட்டுவதற்கு தென்னிலங்கை பௌத்த - சிங்கள அரசு கள் எவையும் தயாராக இல்லை. அவை இவ்விடயத்தில் எத்தகைய வாக்குறுதிக ளையும் வழங்கவில்லை. ஆயினும் சிங் கள மக்கள் மத்தியில் படுகொலை செய் யப்பட்ட ஊடகவியலாளர் லஸந்த விக்கி ரமதுங்க, காணாமலாக்கப்பட்ட பிரகீத் எக்னெலிகொட போன்றவர்கள் விடயத் தில் மாறி மாறி வந்த அரசுகள் வாக்குறு திகள் அளித்த போதிலும், அவையும் நிறைவேற்றப்படவில்லை.

எது, எப்படியாயினும் இலங்கையில் ஊடகங்களுக்கு எதிரான கொடூரங்களைப் பொறுத்தவரையில் அவற்றை இழைத்த வர்கள் இன்னமும் சுதந்திரமாக நடமாடு கிறார்கள். அவர்கள் நீதியின் முன் நிறுத் தப்படுவார்கள், சட்டரீதியாகத் தண்டிக்கப் படுவார்கள், பொறுப்புக் கூறல் நிலை நிறுத்தப்படும் என்றெல்லாம் நம்புவதற்கு இன்னமும் இடமில்லை என்பதுதான் உண்மை.




### சிவாஜிலிங்கத்தின் அழைப்பின் பேரில்

# தமிழராய்ச்சி மாநாட்டுப் படுகொலை; 51 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு

உலகத் தமிழராய்ச்சி மாநாட்டு படுகொலையின் 51 ஆவது ஆண்டு நினைவேந்தல் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கத்தின் அழைப்பின் பேரில் உலகத் தமிழராய்சசி மாநாட்டு படுகொலை நினைவு தூபியில் இன்று காலை இடம்பெற்றது.

இதன் பொழுது உயிர் நீத்த உறவுகளை நினைவுறுத்தி பொதுச் சுடரினை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் ஏற்றி வைத்தார். தொடர்ந்து ஈகைச் சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஏற்பாட்டில் மலர் கன்றுகளும் நட்டு வைக்கப்பட்டன.

இதன் போது நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் , வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் கருணாகரன், நாவலன் சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் இயக்குனர் ஜோதிலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.









# சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் மட்டக்களப்பு நகரை அழகுபடுத்தும் திட்டம்!

**(பழுவூரான்)**

கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின் பெயரில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை வினைத்திறன் உடையதாக முன்னெடுக்கும் செயற்றிட்டங்கள் ஆரம்பித்து வைக்கபபட்டுள்ளன.

மட்டக்களப்பு நகருக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நோக்குடன் மாநகரத்தை அழகுப்படுத்தும் பணிகள் மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் என்.தனஞ்ஜெயனின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் தன்னாமுனை தொடக்கம் பிள்ளையாரடி வரையான சுமார் 3 கிலோ மீற்றர் வரையான பகுதி முதற்கட்டமாகச் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.









# மனித நுகர்வுகளுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருள்கள் குறித்து நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உணவு பண்டங்களை கையாளும் நிறுவனங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜெ. மதன் தலைமையில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஜே.எம்.நிஸ்தார் அடங்கலான பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் அடங்கிய குழுவினர் இந்தத் திடீர் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது மனித பாவனைக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருள்கள் மீட்கப்பட்டன.

அத்துடன் முறையற்ற வகையில் உணவு தயாரிப்பில் ஈடுபட்ட 09 வியாபார நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை வலுவூட்டல்!

## உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டல் நிகழ்வு

(நவாஸ்)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை வலுவூட்டும் தேசிய வேலைத் திட்டம் (2025-2027) தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டல் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் (உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.நஸீல் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சமுர்த்தி தலைமைத்துவ பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட், கருத்திட்ட முகாமையாளர் எஸ்.எல். அஸீஸ், வங்கி முகாமைத்துவ பணிப்பாளர், வங்கி முகமையாளர்கள் மற்றும் ஏனைய திணைக்கள தலைவர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது வளவாளராக தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம். ஹுசைன் கலந்து கொண்டார்.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME



(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA



# ஹட்டனில் இடம்பெற்ற விபத்து; சாரதிக்கு நிபந்தனையுடன் பிணை

**(மஸ்கெலியா)**

ஹட்டனில் இடம்பெற்ற தனியார் பஸ் விபத்தை அடுத்து அதன் வாகனச் சாரதியைக் கடுமையான நிபந்தனையில் பிணையில் விடுவிக்க உத்தரவிட்ட ஹட்டன் மாவட்ட நீதிபதியும் நீதிவானுமான எம்.பரூக்தீன், வழக்கை ஜூன் மாதத்துக்கு ஒத்திவைத்தார்.

நாவலப்பிட்டி, நவதிஸ்பனே பகுதியைச் சேர்ந்த ரம்போடகெதர பிரசன்ன பண்டார (வயது 46) என்பவரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான சாரதியின் சாரதி அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. பஸ் உரிமையாளரான கண்டியைச் சேர்ந்த விஜேரத்ன நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, இரண்டு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அத்துடன் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமை, ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் கைச்சாத்திடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.








# கலாச்சாரப் படுகொலையின் ஆரம்பமே தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா.

***(தமிழ் மக்கள் மீதான கலாச்சாரப் அழிப்பின் ஆரம்பமே 1974 தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையாகும். 51 ஆவது ஆண்டு நினைவுகளில் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையை இன்று (10) ஜனவரி 2025 தமிழர் தாயகம் அனுஷ்டிப்பதை முன்னிட்டு இந்தச் சிறப்புக் கட்டுரை பிரசுரமாகிறது.)***

ஒரு இனத்தை அழிக்குமுன் அதன் சுவடுகளை அழி, அடையாளத்தை அழி என்பதே எதிரிகளின் போருபாயமும், தந்திரமாகும். அதற்கு ஒப்பாக, ஈழத்தில் தமிழர் கலாச்சாரப் படுகொலையின் ஆரம்பம்தான் 1974 இல் இடம்பெற்ற யாழ். தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையாகும்.

**ஸ்ரீமா அரசின் இனபாகுபாடு**

தமிழ் மரபையும், வரலாற்றையும் காத்து நிகழ இருந்த, தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை தமிழ் மக்களின் வரலாற்றில் என்றுமே துடைக்க முடியாத கறையாகியுள்ளது.

இலங்கை அடக்குமுறை அரசுகளின் தொடர்ச்சியான 1958, 1977, 1983 இல் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக் கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. தமிழர் கலாச்சாரத்தை அழிக்க நிகழ்ந்த பண்பாட்டுப் படுகொலை தான் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையாகும்.

ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி தினமான ஜனவரி 10, 1974 இல் மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் ஒன்பது பேர் இலங்கை பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் மரணம் அடைந்தனர்.

சிங்கள பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் மின்கம்பிகள் அறுந்து மக்கள் திரண்டிருந்த இடத்தில் விழுந்தமை, ஆயிரக்கணக்கில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனத் திரண்டிருந்த தமிழ் மக்கள் மத்தியில் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியமை, இரவு நேரத்தில் ஏற்பட்ட இக்குழப்பத்தால் நிகழ்ந்த விபத்துகள் போன்றன இந்த மரணங்களுக்குக் காரணமாயின.

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய ஸ்ரீமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசு, பொலிஸாரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்தியது.

இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதுட்டுமன்றி தமிழர்கள் மனத்தில் நீங்காத வடுக்களாக இந்தப் படுகொலைச் சம்பவம் பதியப்பட்டது.

**மேயர் அல்பிரட் துரையப்பாவின் வஞ்சகம்**

யாழ்ப்பாணத்தில் தமிழராட்சி மாநாடு நடைபெறுவதை அப்போது ஆட்சியிலிருந்த ஸ்ரீமாவோ அரசு விரும்பவில்லை. அரசு இதனை ஏற்றுக் கொள்ளாது கொழும்பில் நேரடியாகவும், யாழ்ப்பாணத்தில் மாநகர மேயர் ஊடாகவும் தொடர்ச்சியான தடைகளை ஏற்படுத்தியது. அத்துடன் மாநாடு நடைபெறுவதற்கான முக்கிய அரங்குகளின் அனுமதி இறுதி நேரம்வரை மறுக்கப் பட்டிருந்தது.

அத்துடன் மாநாட்டில் கலந்து கொள்ள பல வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்டது. இவை எவ்வாறு இருந்தாலும், மாநாட்டை சிறப்பாக நடத்த வேண்டும் என்ற மனவெழுச்சி அமைப்பாளர்களிடமும், மக்களிடமும் இருந்தது. மக்கள் அலை அலையாகத் திரண்டதைக் கண்ட சிங்கள அரசு சற்றுக் கீழிறங்கி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கியது.

அதேவேளை, மாநாட்டுக் குழுத்தலைவர் அன்றைய நீதியாளர் தம்பையா, மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு விரும்பவில்லை. ஆகையால் அவர் தலைவர் பதவியில் இருந்து விலக, பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் தமிழாராய்ச்சி மாநாடு மூன்றாம் திகதி ஆரம்பமாகிப் பத்தாம் திகதி வரை யாழ். முற்றவெளி திறந்த வெளியரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

கோலாகலம் பூண்டிருந்த யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் லட்சக் கணக்கான மக்கள் யாழ். நகரம் வந்தார்கள். அதுவரை நடைபெற்ற எந்தவொரு மாநாடும் இதுபோல சிறப்பாக நடைபெறவில்லை. ஜனவரி 10 ஆம் திகதி மாநாட்டுக்கு வருகை தந்திருந்த அறிஞர்கள் கௌரவிப்பு மற்றும் விருது வழங்கல் என்பன யாழ். திறந்த வெளி அரங்கில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. அன்றைய தினம் குடாநாடு விழாக்கோலம் பூண்டிருந்தது.

ஆனாலும் குறித்த நிகழ்வைத் தடுக்கும் வண்ணம் அப்போது மேயராக இருந்த ஸ்ரீமாவின் ஆதரவாளர் அல்பிரட் துரையப்பா யாழ். திறந்த வெளியரங்களில் நிகழ்வுகளை நடத்தவும் அனுமதி தரமறுக்க குறித்த திறந்த வெளி அரங்கம் மூடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனால் குறித்த நிகழ்வுகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகின. பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூடியிருந்ததால் வீரசிங்கம் மண்டபம் மக்கள் கூட்டத்தால் நிரம்ப, ஏனைய பொது மக்கள் வீரசிங்க மண்டபத்துக்கு முன்னாலும், யாழ். முற்றவெளியிலும் தங்கியிருந்தனர்.

**இறுதி நாள் நிகழ்வு**

1974 ஆம் ஆண்டு ஜனவரி பத்தாம் திகதி இறுதி நாளாகக் கொண்டாடப்பட்டது. இறுதி நிகழ்வாக அறிஞர்கள் தமிழின் பெருமைகளையும், ஈழப் பண்பாட்டின் பெருமையையும் பற்றிப் பேசினார்கள்.

ஈழத் தமிழ் மக்கள் உணர்வோடு கைதட்டி உற்சாகப் படுத்தினர். இறுதியாகத் தமிழகப் பேராசிரியர் நைனா முகமது பேசிக் கொண்டிருக்கும் போது யாழ். உதவிக்கு பொலிஸ்மா அதிபர் சந்திரசேகரா தலைமையிலான

தொடர்ச்சி ▼

# கலாச்சாரப் படுகொலையின் ஆரம்பமே தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை!

தொடர்ச்சி▲

பொலிஸார் மாநாட்டில் கலந்து கொண்டிருந்த மக்களைத் தாக்கியதுடன், துப்பாக்கியாலும் சுட்டனர்.

இந்தச் சம்பவத்தில் ஒன்பது பொது மக்கள் உயிரிழந் தார்கள். பல தமிழ் மக்கள் காயமடைந்தனர். நிகழ்ச்சி அரங்குகள் சேதமடைந்தன.

இந்த மாநாட்டைக் குழப்பிய யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேகரா பின்னர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவால் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளான 10.01.1974 அன்று கொல்லப்பட்ட மக்களின் விவரம் வருமாறு:

வேலுப்பிள்ளை கேசவராஜன் (வயது - 15 - மாண வன்), பரம்சோதி சரவணபவன் (வயது - 26), வைத்திய நாதன் யோகநாதன் (வயது - 32), ஜோன்பிடலிஸ் சிக்மறிங்கம் (வயது 52 - ஆசிரியர்), புலேந்திரன் அருளப்பு (வயது - 53), இராசதுரை சிவானந்தம் (வயது - 21 - மாணவன்), இராஜன் தேவரட்ணம் (வயது - 26), சின்னத்துரை பொன்னுத்துரை (வயது - 56 - ஆயுள்வேத வைத்தியர்), சின்னத்தம்பி நந்தகுமார் (வயது - 14 - மாணவன்) ஆகியோர் இந்த மாநாட்டில் கொல்லப்பட்டனர்.

இந்த இறப்புகளின் பின்னர் தீவிரமாக வெளிப்பட்ட தமிழ்த் தேசியவாத போக்கால், ஈழப் போராட்டம் பின்னர் தீவிரமாக வளர்ச்சியுறத் தொடங்கியது.

50 ஆவது ஆண்டு நினைவுகளில் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையை 10 ஜனவரி 2025 தமிழர் தாயகம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கிறது. தமிழா ராய்ச்சி மாநாட்டு படுகொலை தமிழ் மக்களின் வர லாற்றில் என்றுமே அழிக்க முடியாத வடுவை உருவாக்கியுள்ளது.




# சதுப்பு நிலங்கள் மற்றும் காடுகளை மீளமைத்தல் பற்றித் தெளிவூட்டல்

(ஹஸ்பர் ஏ.எச்.)


சதுப்பு நிலங்கள் மற்றும் ஏனைய காடுகளை மீளமைத்தல் மற்றும் பாது காத்தல் தொடர்பாக கிழக்கு மாகாண அரச அதிகாரிகள் உட்பட முக்கிய பங்குதாரர்களுக்கு தெளிவூட்டும் செய லமர்வு திருகோணமலையில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வு 'புறோகிளீம்' நிறு வனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகரவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

மாவட்ட பதில் அரச அதிபர் எஸ். சுதாகரன் உட்பட பிரதேச செயலாளர் கள், திட்டமிடல் பிரதி பணிப்பாளர்கள், துறை சார் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.








# விளம்பரமும் இளைஞர் சமூகமும்...!

விளம்பரங்கள் நவீன கால மனித சமுதாயத்தின் உயிர்நாடி என மு. மேத்தா குறிப்பிடுகின்றார். அந்த வகையில் மனித வாழ்வில் விளம்பரங்கள் இன்றியமையாத அம்சமாக மாறியுள்ளன.

வணிகத்தின் முதுகெலும்பாக விளங்கும் விளம்பரங்கள் இளைஞர் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. விளம்பரங்களுக்கு நீண்ட வரலாற்று பின்னணி உண்டெனலாம்.

ஆரம்ப காலத்தில் குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வாழ்ந்த ஆதிகால மனிதன் தனது கண்டுபிடிப்புகளையும் கருவிகளையும் சைகை மூலமும் மற்றும் வாய்மொழி மூலம் மற்றவர்களுக்கு அறிவித்தான். இதுவே முதலாவது தோன்றிய வாய்மொழி விளம்பரம் ஆகும்.

ஒரு பொருளை அல்லது சேவையை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு மற்றும் விற்பனை செய்வதற்காகப் பயன்படுத்தும் ஒரு தொடர்பாடல் கருவியாக விளம்பரங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் விளம்பரங்களில் பயன்படுத்தப்படும் நுட்ப முறைகள் விரைவாக வாடிக்கையாளரை அல்லது நுகர்வோரிடத்தே யான உணர்ச்சிவசப்பட்ட நுகர்வைத் தூண்டி பொருள்கள் அல்லது குறித்த விடயம் மீதான ஈர்ப்பை அதிகரிக்கின்றன.

அத்தகைய நுட்பங்களுள்,

1. ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் செய்தல்.
2. பிரபல்யமானோரை கொண்டு விளம்பரப்படுத்தல் (Brand Ambassadors).
3. கேள்வி முறையிலான விளம்பரப்படுத்தல்.
4. குறியீட்டு முறையிலான விளம்பரப்படுத்தல.
5. உணர்ச்சி முறையான விளம்பரப்படுத்தல்.
6. கவர்ச்சிரமான, காட்சி விம்பங்கள்.
7. நகைச்சுவைப்போக்கான விளம்பரப்படுத்தல்.

இவ்வாறு பல்வேறு நுட்பங்களைப் பிரயோகித்தலின் மூலமான விளம்பரப்படுத்தலானது நுகர்வோரிடத்தே குறிப்பாக இளைஞர்களிடத்தே அதிக ஈர்ப்பை உருவாக்குகிறது.

அந்தவகையில், விளம்பரங்களின் ஆரம்ப வரலாற்றை நோக்கும் போது 15 ஆம் நூற்றாண்டில் அச்சு இயந்திர வருகையால் விளம்பரங்கள் இதழ்களிலில் வெளிவர தொடங்கின. அதன் பிறகு வானொலி, தொலைக்காட்சி வருகையால் விளம்பரங்கள் பட்டித்தொட்டி எங்கும் பரவியது.

தொழில்நுட்ப வளர்ச்சியால் இன்று உலகத்தை கைக்குள் வைத்திருக்கும் தொலைபேசியும் இணையமும் விளம்பரங்களை உச்சம் தொடவைத்தன.

ஒரு குழந்தை பிறப்பு முதல் இறப்புவரை விளம்பரங்கள் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றன.

விளம்பரங்களால் வர்த்தக சந்தையில் கடுமையான வர்த்தகப் போட்டி நிலவி வருகிறது என்று தெரிவிக்கப்படக்கப்படுகின்றது. 19 ஆம் நூற்றாண்டில் பொருளாதாரம் விரிவடைந்த போது அதனோடு விளம்பரம் வளர்ச்சி பெற்றது. வணிகமயமாதலில் விளம்பரம் ஒரு உத்தியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தவகையில் “மக்களின் தேவைகளை நிவர்த்திசெய்ய பொருளுற்பத்தி என்ற நிலை மாறி பொருளுற்பத்தி மனித தேவைகளை தீர்மானிக்கும் காரணிகளாக மாற்றமடைய நவீனத்துவமடைந்த விளம்பரங்களது பங்களிப்பே காரணமாகின்றதெனலாம்”.

இலாப நோக்கில் வளர்ச்சி காணும் வணிக நிறுவனங்களின் வியாபாரத்தில் வெற்றியை இன்று விளம்பரங்களே தீர்மானிக்கின்றன. பெரும்பான்மையான வணிக நிறுவனங்கள் இளைய சமுதாயங்களை இலக்கு வைத்து தன் உற்பத்தியை வழங்கி வருகின்றன. அந்த வகையில் விளம்பரங்கள் இளம் சமுதாயத்தில் தீவிரமான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன.

அமெரிக்கா உளவியல் சங்கத்தின் ஒரு அறிக்கையின் படி குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தினசரி சராசரியாக 4000 முதல் 10000 வரை விளம்பரங்களை பல்வேறு ஊடகங்களில் பார்வையிடுகின்றார்கள். விளம்பரதாரர்கள் இளைஞர்களின் கவனத்தை ஈர்க்கப் பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்துகின்றார்கள்.

கலிபோர்னியா பல்கலைகழகத்தின் ஒரு ஆய்வு, இளைஞர்கள் விளம்பரங்களுக்கு அதிகம் அடிமையாகின்றார்கள் என்பதைக் கூறுகிறது. விளம்பரங்கள் இளைஞர்கள் வாழ்க்கையில் பல்வேறு கோணங்களில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன.

அந்த வகையில்

1. இளைஞர்களது கல்வியில் விளம்பரங்கள் – கல்வி நிறுவனங்கள் விளம்பரங்களுடனே தன்னை பிரபல்யப்படுத்திக் கொள்கின்றன. உதாரணமாக அதி நவீன வசதிகள், சிறந்த இடங்கள், வேலைவாய்ப்புகள் போன்றவற்றை வலியுறுத்திக் கொள்வதின் ஊடாக இளைஞர்களின் கவனத்தை ஈர்க்கின்றன.

கல்வித் தொடர்பான செயலிகள், டிஜிட்டல் சாதனங்கள் கல்வியை நவீனமாகவும் துரிதமாகவும் மாற்றுகிறன. விளம்பரங்கள் மூலம் கிராமப்புறங்களில் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது. அவ்வாறிருக்க, சமீப காலகட்டத்தில் கல்வி வியாபாரம் ஆக்கப்பட்டுள்ளது.

புதிய பயிற்சி நெறிகள் இலவசமாக கற்றுக்கொள்ளப்படுகின்றன என்று விளம்பரம் செய்துவிட்டு பிறகு கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்ற சூழ்நிலையை ஏற்படுத்துகின்றார்கள். இதனால் இளைஞர்கள் பாரிய சவாலுக்கும் மன அழுத்தத்துக்கும் முகங்கொடுக்கிறார்கள். அந்த வகையில் நவீன தேடல் சாதனங்களில் கல்விசார் தகவல்களை தேடும் போது இடம்பெறும் விளம்பரப்படுத்தல்கள் மாணவர்களுடைய கல்வி அணுகலை திசை திருப்புவதுடன் குறித்த விளம்பர காட்சி மீதான ஆர்வத்தையும் அது தொடர்பிலான தேடலையும் அதிகரிக்கிறது. இதனால் மாணவர்கள் கல்வியில் நாட்டமின்மையோடு செயற்பட ஒருசில

தொடர்ச்சி▼

# விளம்பரமும்...

தொடர்ச்சி▲

விளம்பரங்கள் காரணமாகின்றன.

எடுத்துக்காட்டாகக் கல்விசார் இணைய தள பக்கங்களில் பாலியல் ரீதியான விளம்பரங்கள் காட்சிப்படுத்தல்.

கல்வியை தரமான சேவைகளை மட்டுமே விளம்பரப்படுத்துவது கல்வித் துறைக்கு சிறந்தது.

2. இளையோர்க்கான தொழில் தளத்தில் விளம்பரங்கள் – உலகளாவிய ரீதியில் வேலை வாய்ப்புகளைத் தேடுவதற்கு விளம்பரங்கள் ஒரு பாலமாக காணப்படுகின்றன. இன்று வேலை வாய்ப்புகளை பெறுவதற்கான போட்டிச் சந்தை அதிகரித்து வருகின்றது. விளம்பரங்கள் வேலை வாய்ப்பு பற்றிய அறிவிப்பை வெகுஜன ஊடகங்கள், சமூக ஊடகங்கள், நாளிதழ்கள், இணையதளங்கள் போன்ற ஊடகங்களின் ஊடாக வெளிப்படுத்துகின்றன.

இதன் இளைஞர்கள் தகவல் தொழில்நுட்பம், மருத்துவம், கல்வி மற்றும் தொழிற்துறை என பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள அவர்களது ஆளுமைகளை வெளிப்படுத்தும் களமாகப் பெரும் உதவியாக அமைகின்றது. சில வேலைவாய்ப்பு விளம்பரங்கள் உண்மையான தகவல்களைக் கடந்து சில போலியான தகவல்களையும் வழங்குகின்றது. அதனை நம்பி இளைஞர்கள் ஆபத்தான சூழ்நிலையில் சிக்கிக் கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக சொகுசு வாழ்க்கையைத் தேடி துன்பத்தை சம்பாதித்துக் கொள்கின்றார்கள் மற்றும் அகதிகளாக வாழ்கின்றனர்.

3. இளைஞர்களது வாழ்வியலாக விளம்பரங்கள் – இன்றைய இளைஞர்கள் ஆடம்பர வாழ்க்கை முறையை விரும்புகின்றார்கள். நாகரீகம் என்பது நாளாந்தம் மாறிவரும் நவீன உடை, துரித உணவு பழக்கம் என்பதில் தொடங்கி இளைஞர்களது தொடர்பாடல் பாங்கு, பேசும்விதம் , உணர்ச்சிகளை வெளிகாட்டும் பாங்கு, பழக்கவழக்கங்கள் என்று ஒட்டு மொத்தமாகச் சகல இளைஞர்களையும் ஏதோ ஒரு வகையாக விளம்பரங்கள் ஆக்கிரமித்துள்ளன.

இளைஞர்களை மையமாகக் கொண்டு இடம்பெறும் விளம்பரங்கள் பிரபல்யமான சினிமா நடிகர்கள், விளையாட்டு வீரர்கள், சமூக வலைத்தள பிரபலங்களை கொண்டு இடம் பெறுகின்றன.

குறிப்பாக அழகுக்கு ஒப்பனை கொடுக்கும் வகையில் அவர்களின் உணர்வுகளை தூண்டி தேவையற்ற செலவுகளையும் புகுத்தி விடுகின்றன. இந்த விளம்பரங்கள். எடுத்துக்காட்டாக மூன்று நாள்களில் வெண்மையாக்கும் கிரீம்கள், அடர்த்தியான, நீளமான கூந்தலுக்கு எண்ணெய் வகைகள் என்று அழகு சாதன பொருள்கள் சமூக ஊடகங்களில் அதிகம் பரப்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இளைஞர்களின் உணர்ச்சிகள் ஆசைகள் மற்றும் சிந்தனைகள் விளம்பரப்படுத்தப்பட்ட தயாரிப்பு சேவையுடன் இணைக்கப்பட உளவியல் தந்திரங்களை பயன்படுத்துகின்றனர். எனவே இளைஞர்களின் உளவியல் ஆற்றுப்படுத்துகையில் விளம்பரங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

விளம்பரங்கள் கலாச்சாரத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கம் செலுத்தி வருகின்றன. உலகளாவிய ரீதியில் காணப்படும் பல்லின கலாச்சாரங்களை ஒன்றிணைத்து ஒரே கலாச்சாரத்தை விதைக்கின்றன.நோக்கம் கருதிய விளம்பரங்களுக்காக ‘வாட்ஸ் அப்’ செயலியில் ஒரு குழுமமாக கல்வி உட்பட்ட ஒத்த நோக்கங்களுக்காக இணைகையில் அங்கு வேற்றுமையில் ஒற்றுமையைக் காணத்தக்க நிகழ்நிலை இளைஞர் சமுதாயங்கள் தோற்றம் பெறுகின்றன.

இளம் சமுதாயத்தினர் மறந்து போன பாரம்பரிய கலாச்சாரம் இன்று நவீன பார்வை கோணத்தில் அறிமுகப்படுத்தி இளைய தலைமுறையுடன் இணைக்கப்படுகின்றது.

குறிப்பாக திருமண உறவுகளை இணைத்தலுக்கான விளம்பரங்களை காட்சிப்படுத்தலினூடாக பாரம்பரியங்களை பேணுதலுக்கான தளத்தை வழங்குகிறது என்றாலும் இவற்றின் வழி தவறான மோசடிகளும் இடம்பெறவே செய்கின்றன.

அந்தவகையில், துழரசயெட ழக உழளெரஅநச சுநளநயசஉா என்ற இதழில் வெளியான ஆய்வின்படி. புதிய தயாரிப்புக்கு அடிமையாக மாறுவதற்கு 60 வீதமான இளைஞர்கள் அதிக விருப்பங்களை வெளிப்படுத்துகின்றார்கள்.

சமூகத்தில் அதிகம் பேசப்படாத ஒரு விடயமான பாலின சமத்துவத்தை விளம்பரங்கள் பேச வைக்கின்றன.40 வீதமான விளம்பரங்கள் ஆரம்பத்தில் ஆண்களுடன் பெண்கள் மதிப்பீட்டில் குறைவாக இருந்தவந்தவர்கள் என்ற கட்டமைப்பை முன்வைக்கின்றது. பெண்களை மையப்படுத்திய அதிகமான விளம்பரங்கள் வெளிவருகின்றன. பாலின சமத்துவத்தோடு பெண்களை முதன்மைப்படுத்தும் 43 வீதமான விளம்பரங்கள் இருந்தாலும் இந்த மாற்றம் 2020 இற்குப்க் பிறகு வந்துள்ளன.

பெண் தலைமைத்துவம் கொடுக்கப்பட்ட நவீன காலகட்டத்திலும் அன்றிலிருந்து இன்றுவரை பெண்களை குறைத்து எடை போடும் சமூகம் ஒன்று இருந்து கொண்டேதான் வருகின்றது. பெண்களை அழகு பொருளாகவும் பாலியல் பொருளாகவும் பார்க்கப்படக்கூடிய ஒரு விம்பம் இன்றைய இளைய தலைமுறையிடம் கட்டமைக்கப்பட்டுள்ளது

பால்நிலை ரீதியான வார்ப்பெண்ணங்களை தகர்க்கும் வகையில் பெண்களை வலிமையானவர்களாக சித்தரிக்கும்,பெண்களுகளுக்கென இயல்பில் கட்டமைக்கப்பட்ட சமையல் உற்பட்ட வீட்டுப்பணிசார் விளம்பரங்களில் இன்று ஆண்களையும் ஈடுபட வைக்கும் விளம்பரங்கள் பால்நிலை சமத்துவம் மற்றும் ஒப்புரவினை சமூகத்தில் இளையோர்களிடம் உருவாக்குகின்றன என்றாலும் பால்நிலை ரீதியாக மென்மேலும் வளர்க்கப்படவும் விளம்பரங்கள் மூலமாக வளர்க்கப்பட வேண்டிய மற்றுமொரு அம்சமாக,மூன்றாம் பாலினத்தவர்க்கான சமூக அங்கிகாரத்தை வழங்கத்தக்க விளம்பரங்கள் வெளிவர வேண்டும்.

அந்தவகையில், இன்றைய இளைஞர்கள் டிஜிட்டல் சந்தைப்படுத்தல், ஆன்லைன் விளம்பரங்கள் அதிகம் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். மேலும் நிகழ்நிலை செய்யப்படும் வணிகங்களால் இளைஞர்களின் நுகர்வு முறைகள் மாற்றப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஆன்லைன் ஷாப்பிங் தளங்கள், மின்னணு தளங்கள் மற்றும் தொழில்நுட்ப விளம்பரங்கள் இளைஞர்கள் தொழில்நுட்ப நிகழ்நிலை தொழில் முறைகள் என்று பொருளாதார ரீதியாக ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இவ்வாறு விளம்பரங்கள் இளைஞர்களின் வாழ்க்கையில் தாக்கம் செலுத்தி அவர்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து செல்லும் பிரிக்க முடியாத உறவைக் கொண்டுள்ளதன. அவ்வாறு இருப்பினும் இளைஞர்கள் விளம்பரங்களை விமர்சன ரீதியாக புரிந்து கொள்ளும் திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

விளம்பரங்கள் நெறிமுறைகளை பின்பற்றி விருத்தி காண வேண்டும். நவீன தொழிநுட்பத்தோடு இயங்கும் விளம்பரங்கள், ஆக்கத்திறனும் ஈடுபாடும் உடைய இளைஞர்களால் சமூக சீர்த்திருத்தங்கருதிய நோக்கங்களுடன் வடிவமைக்கப்பட வேண்டும்.

வியாபார நோக்கங்கருதி சமூக சீரழிவுகளை, சமூகக் குற்றங்களை ஊக்குவிக்கும் விளம்பரங்கள் சர்வதேச ரீதியாக தடை செய்யத்தக்க சட்ட நடைமுறைகள் வழமைக்கு கொண்டு வருதல் ஊடாக விளம்பரங்களை நல்நோக்கம் கருதிய விளம்பரங்களாக ஊக்குவிக்க முடியும். அதனூடாக சர்வதேச ரீதியாக நேர்நிலையான சமூகமொன்றைக் கட்டியெழுப்ப முடியும்.

**- சிவகுமார் அனோஜா.**

# விபத்தில் படுகாயமடைந்த சட்டத்தரணி உயிரிழந்தார்!

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச தம்பட்டை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த தம்பிலுவிலை சேர்ந்த சட்டத்தரணி லயன் எஸ்.சசிராஜ் சிகிச்சை பலனின்றி காலமானார்.

கடந்த திங்கட்கிழமை மோட்டார் சைக்கிளில் பயணித்துகொண்டிருந்த போது தம்பட்டைப் பிரதேசத்தில் தேங்காய் ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.



மேலதிக சிகிச்சைக்காகக் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று இரவு வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தம்பிலுவில்லை சேர்ந்த சட்டத்தரணியும் திடீர் மரண விசாரனை அதிகாரியுமான சசிராஜ், இலங்கை சட்டக் கல்லூரியில் பயின்று சட்டத்தரணியாக வெளியேறினார்.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் தடயவியல் துறையில் டிப்ளோமா பட்டம் பெற்றவர். திடீர் மரண விசாரணை அதிகாரியுமாவார். கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர் ஆவார்.




# கொழும்பு பாபா நிலையத் தலைவருக்கு "சேவா திலகம்" பட்டமளித்து கௌரவிப்பு

கொழும்பு, புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைவர் எஸ்.என்.உதயநாயகன், பிரஸ்தாப சாயி நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று, 24 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு சாயி நிலையத்தினர் அவரைப் பாராட்டி "சேவா திலகம்" எனும் பட்டமளித்து கௌரவித்தனர்.

நிகழ்வில் பொதுச் செயலாளர் சிவா. இராஜஜோதி, பொருளாளர் சுந்தரம் தவகுமார், அறங்காவலர் கோபால் ஜீவரட்ணம் ஆகியோரும் பங்கேற்றனர். சாயி பஜனையும் பூஜையும் இடம்பெற்றன.








# உலகின் வலிமையான பிரதமர் நரேந்திர மோடி

## ட்ரூடோ பதவி விலகிய நிலையில் பா.ஜ.க. புகழாரம்

உலகின் மிகவும் வலிமையான பிரதமர் நரேந்திர மோடி என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகல் தொடர்பில் பாரதிய ஜனதா கட்சி கருத்து வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிராக கருத்து தெரிவித்து வந்த கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது பதவியை இராஜினாமா செய்கின்றார். அத்துடன் லிபரல் கட்சி தலைவர் பதவியிலிருந்தும் விலகியுள்ளார்.

இந்த நிலையில், கடந்த 10 ஆண்டுகளில் உலகின் மிகவும் சக்தி வாய்ந்த நாடுகளின் தலைமைகள் அடிக்கடி மாறியபோதும், நிலையான மற்றும் வலிமையான பிரதமராக நரேந்திர மோடி நீடித்து வருகின்றார் என பா.ஜ.க. எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளது. பிரதமர் மோடியை 'அல்டிமேட் பிக்பாஸ்' என்று சித்தரிக்கும் ஒரு விளக்கப்படத்தை எக்ஸ் வலைதளத்தில் பா.ஜ.க. பகிர்ந்துள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது,

உலகின் வல்லரசு நாடாக கருதப்படும் இங்கிலாந்தில் கடந்த 2014 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை டேவிட் கெமரூன், தெரஸா மே, போரிஸ் ஜான்ஸன்,லிஸ் டிரஸ் , ரிஷி சுனக் என 5 பிரமதர்கள் மாறியுள்ளனர். தற்போது கெய்ர் ஸ்டார்மர் பிரதமராக உள்ளார். அதேபோன்று அவுஸ்திரேலியா இந்த காலகட்டத்தில் டோனி அபாட், மால்கம் டர்ன்புல், ஸ்காட் மாரிஸன் என 3 பிரதமர்கள் மாற்றத்தை கண்டுள்ளது. தற்போது அண்டனி அல்பனீஸ் பிரதமர் பொறுப்பு வகிக்கிறார்.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் கடந்த பத்தாண்டுகளில் பராக் ஒபாமா, டிரம்ப், ஜோ பைடன் என மூன்று பிரதமர்கள் மாறியுள்ளனர். ஜப்பானில் ஷின்ஷோ அபே, யாஷிகிடே சுகா, புமியோ கிஷ்கிதா என 3 பிரதமர்கள் மாற்றம் கண்டு தற்போது அந்தப் பொறுப்பை ஷிகெரு இஷிபா வகித்து வருகிறார். இது தவிர,கனடாவும் ஸ்டீபன் ஹார்பர், ஜஸ்டின் ட்ரூடோ என 2 பிரதமர்கள் மாற்றத்தை சந்தித்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் உலகளவில் பொருளாதார பலம் வாய்ந்த பல முக்கிய நாடுகளின் பிரதமர்கள் பலமுறை மாறியபோதும் இந்தியாவில் இன்னும் நிலையான மற்றும் வலிமையான பிரதமராக நரேந்திர மோடி திகழ்கிறார். “அல்டிமேட் பிக்பாஸ் எனர்ஜி” பிரதமர் நரேந்திர மோடி என பா.ஜ.க. அந்த பதிவில் புகழாரம் சூட்டியுள்ளது.

# டில்லி எல்லை போராட்ட களத்தில் மேலும் ஒரு விவசாயி தற்கொலை

டில்லி எல்லையில் நடைபெற்று வரும் போராட்ட களத்தில் மேலும் ஒரு விவசாயி நேற்று தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

டில்லியின் ஷம்பு மற்றும் கன்னவுரி எல்லையில் பஞ்சாப், ஹரியானா விவசாயிகள் கடந்த சில மாதங்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வேளாண் விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு உத்தரவாதம் அளிக்க வகை செய்யும் சட்டம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

இதில் விவசாயிகள் சங்க பிரதிநிதி ஜெகஜித் சிங் தல்லிவால் (வயது 70) கடந்த நவம்பர் 26 ஆம் திகதி முதல் உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அவருடைய உடல்நிலை மோசமடைந்து வருவதால் கவலை அடைந்த ரஞ்சோத் சிங் என்ற விவசாயி கடந்த டிசம்பர் 18 ஆம் திகதி தற்கொலை செய்து கொண்டார்.

இந்நிலையில், ஷம்பு எல்லையில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த, பஞ்சாப் மாநிலம் டார்ன் டரன் மாவட்டம்



பஹுவிந்த் கிராமத்தைச் சேர்ந்த ரேஷம் சிங் (வயது 55) நேற்று விஷம் அருந்தினார் என கூறப்படுகிறது.

இதையடுத்து, பட்டியாலாவில் உள்ள மருத்துவமனையில் அவரை அனுமதித்துள்ளனர். ஆனால், ஏற்கெனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



# ஆயிரம் ட்ரோன்களை விரைவில் படையில் இணைக்கிறது ஈரான்

ஈரான் இராணுவம் தனது படைகளில் 1,000 மூலோபாய ட்ரோன்களை விரைவில் சேர்க்கவுள்ளதாக அறிவித்துள்ளது, இது நாட்டின் பாதுகாப்பு திறன்களை அதிகரிக்கச் செய்யுமென தெரிவிக்கப்படுகிறது.

ஈரான் இராணுவத்தின் மக்கள் தொடர்புகளின் அறிக்கையின்படி, பாதுகாப்பு மற்றும் ஆயுதப்படை தளவாட அமைச்சகத்துடன் இணைந்து இராணுவத்தால் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட இந்த ட்ரோன்கள் எதிர்வரும் நாள்களில் இராணுவத்தில் சேர உள்ளன.

நேற்று வியாழக் கிழமை நடந்த ஒரு விழாவின் போது, ஈரானின் இராணுவ தரைப்படைகளின் தளபதி பிரிகேடியர் ஜெனரல் கியோமர்ஸ் ஹெய்டாரி, இராணுவத்தின் தரைப் படைகள் மேம்பட்ட இராணுவ உபகரணங்கள் மற்றும் ஆயுதங்களைப் பெறுவதற்கான திறனை வலியுறுத்தினார்.

புதிய ஆயுதம் நான்கு அத்தியாவசிய திறன்களைக் கொண்டுள்ளது என்பதை அவர் எடுத்துரைத்துள்ளார். நீண்ட தூரம், துல்லியம், உளவுத்துறை மற்றும் நெட்வொர்க் நோக்குநிலை, இவை அச்சுறுத்தல்களை எதிர்கொள்எப் பயன்படுத்தப்படும்.

சமீபத்திய ஆண்டுகளில் ஈரான் அதன் ட்ரோன் திறன்களை கணிசமாக மேம்படுத்தியுள்ளது, பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் ஆளில்லா வான்வழி தொழில்நுட்பத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

# தேர்தலில் போட்டியிட்டிருந்தால் ட்ரம்ப்பை தோற்கடித்து இருப்பேன்

## ஜோ பைடன் தெரிவிப்பு



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தான் இரண்டாவது முறையாக போட்டியிட்டு இருந்தால், டொனால்ட் ட்ரம்ப்பை தோற்கடித்து இருப்பேன், என தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்தது. குடியரசு கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப் களமிறங்கினார். ஜனநாயக கட்சி சார்பில், முதலில் ஜோ பைடன் களத்தில் இருந்தார். ஆனால், வயது முதிர்வு உள்ளிட்ட காரணங்களினால் அவர் போட்டியில் இருந்து திடீரென விலகினார்.

அவருக்கு பதில் துணை ஜனாதிபதி கமலா ஹாரீஸ் போட்டியிட்டார். ஆனால், இத்தேர்தலில் ட்ரம்ப் அமோக வெற்றி பெற்றார். எதிர்வரும் 20 ஆம் திகதி அவர் பதவியேற்க உள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதி பைடன் அளித்த பேட்டி ஒன்றில் தெரிவிக்கையில், “ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு இருந்தால், ட்ரம்ப்பை தோற்கடித்து இருப்பேன் என நம்புகிறேன். அதற்கான சிறந்த வாய்ப்பு என்னிடம் இருந்ததாக நினைக்கிறேன்.

ஆனால், 86 வயதாகும் நிலையில், மீண்டும் ஜனாதிபதி ஆக வேண்டும் என நான் விரும்பவில்லை. இதனால், போட்டியில் இருந்து ஒதுங்கினேன். 86 வயதாகும் நான், அடுத்து என்ன செய்யப்போகிறேன் என யாருக்கும் தெரியாது.

தேர்தல் வெற்றிக்கு பிறகு ஓவல் அலுவலகத்தில் என்னை சந்தித்த ட்ரம்ப்பிடம், அரசியல் எதிரிகளை கண்டுபிடித்து பழிவாங்க வேண்டாம் என அவரிடம் கூறினேன். ஆனால், அதற்கு ட்ரம்ப் எந்த பதிலும் கூறவில்லை.”– என்றார்.

# மியான்மர் இராணுவ தாக்குதல் 40 பேர் உயிரிழப்பு; 20 பேர் காயம்

மியான்மர் ராணுவம் நடத்திய தாக்குதலில் 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

மியான்மரில் கடந்த 1988 ஆம் ஆண்டு முதல் இராணுவ ஆட்சிக்கு எதிராக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. சுமார் 22 ஆண்டுகள் போராட்டத்துக்குப் பிறகு கடந்த 2011 ஆம் ஆண்டில், இராணுவம் பணிந்து ஜனநாயக ஆட்சிக்கு வழிவிட்டது.

கடந்த 2015 ஆம் ஆண்டில் பொதுத்தேர்தலில் ஆங் சான் சூசியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. கடந்த 2021 ஆம் ஆண்டில் இராணுவம் மீண்டும் ஆட்சியை கைப்பற்றியது.

தற்போது இராணுவ ஆட்சிக்கு எதிராக எம்.என்.டி.ஏ.ஏ, டி.என்.எல்.ஏ. மற்றும் ஏ.ஏ. ஆகிய 3 கிளர்ச்சிக் குழுக்கள் ஒன்றிணைந்து ஆயுத போராட்டம் நடத்தி வருகின்றன.



மியான்மரின் 50 சதவீத பகுதிகள் கிளர்ச்சிக் குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்த சூழலில் ஏ.ஏ. என்ற கிளர்ச்சிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள ராம்ரி தீவின் கியாக் நி மா என்ற கிராமத்தின் மீது மியான்மர் இராணுவம் நேற்று முன்தினம் திடீர் தாக்குதல் நடத்தியது. இதில் 40 பேர் உயிரிழந்தனர். 20 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்,

பக்கங்கள் 03

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 10/01/2025


## கனடா பொருளாதாரம் வலுவானதாக உள்ளது

**ட்ரம்ப் கருத்துக்கு கனடா பதிலடி**

கனடா பொருளாதாரம் வலுவானதாக உள்ளது என்று கனடா வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி தெரிவித்துள்ளார்.

02▶





# ஜஸ்டின் ட்ரூடோவுக்கு பதிலாக பிரதமராக யாருக்கு வாய்ப்பு?

**கனடா பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாக ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ள நிலையில், அவருக்கு பதில் யார் புதிய பிரதமராக வருவார்கள் என்ற கேள்வி விவாதிக்கப்பட்டு வருகிறது.**

**கனடாவில் அதிகரித்து வரும் உணவுப் பொருள்களுக்கான விலை உயர்வு, வீட்டு வசதிக்கான விலை உயர்வு, அதிகரித்து வரும் குடியேற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு உள்நாட்டில் எதிர்ப்பு அதிகரித்துள்ளது.**

மார்ச் மாதம் கூட உள்ள நாடாளுமன்றத்தில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்போவதாக எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி உள்ளிட்ட கட்சிகள் அறிவித்துள்ளன.

தற்போது ஆளும் லிபரல் கட்சிக்கு போதிய பெரும்பான்மை இல்லை. பெரும்பான்மைக்கு 170 உறுப்பினர்களின் ஆதரவு தேவை எனும் நிலையில் லிபரல் கட்சி 153 உறுப்பினர்களை மட்டுமே கொண்டுள்ளது. சில சிறிய கட்சிகளின் ஆதரவுடன் ட்ரூடோ ஆட்சி செய்து வரும் நிலையில் எதிர்க்கட்சிகளின் இந்த அறிவிப்பு அவருக்கும் லிபரல் கட்சிக்கும் பின்னடைவை ஏற்படுத்தும் என்பதால் லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ட்ரூடோவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கினர்.

இந்தப் பின்னணியில் பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாகவும் புதிய பிரதமர் பொறுப்பேற்கும் வரை பதவியில் தொடரப் போவதாகவும் ட்ரூடோ அறிவித்தார். அதேநேரத்தில் புதிய பிரதமராக யார் பொறுப்பேற்றாலும் அவரின் பதவிக் காலம் விரைவில் முடிவுக்கு வரலாம் என்ற எதிர்கால சவாலை லிபரல் கட்சி எதிர்கொண்டு வருகிறது.

கனடா வங்கியின் (பேங்க் ஆ·ப் கனடா) முன்னாள் தலைவரான மார்க் கார்னி கனடாவின் அடுத்த பிரதமராக ஆகக்கூடும் என தகவல் வெளியாகி உள்ளது. 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட சர்வதேச நிதி நெருக்கடியில் இருந்து பல நாடுகளை விட கனடா வேகமாக மீண்டதற்கு மார்க் கார்னி முக்கியக் காரணம் என கூறப்படுகிறது. மிகச் சிறந்த பொருளாதார நிபுணரான கார்னி அரசியலில் பிரவேசித்து பிரதமராவதில் நீண்ட காலமாக ஆர்வம் கொண்டிருந்தார் என கூறப்படுகிறது. எனினும் அவருக்கு அரசியல் அனுபவம் இல்லை

02▶

# கியூபெக் மாகாணத்தில் இடம்பெற்ற கொலை தொடர்பில் மூவர் கைது

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வுட்பீன் கடற்கரை பகுதியில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்த சம்பவத்தில் 21 வயதான டசிக்கா மதோ என்பவர் உயிரிழந்திருந்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



இந்த சந்தேக நபர்களுக்கு எதிராக ரொறன்ரோ மற்றும் டர்ஹம் பிராந்தியங்களில் பிடிவிராந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

18 வயதான ரிக்கார்டோ வில்லீஸ், 19 வயதான லுக்கீரா 26 வயதான கெனத் நீல் ஆகியோர் இந்த கொள்ளை சம்பவத்துடன் தொடர்பு பட்டுள்ளனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களுக்கு எதிராக கொலை மற்றும் கொள்ளை குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வழக்கு தொடரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கனடியர்கள் அதிக அளவில் கடன் பெற்றுக்கொள்ள நேரிடும்

## நுகர்வோர் குறித்த அறிக்கையில் தகவல்

கனடியர்கள் அதிக அளவில் கடன் பெற்றுக்கொள்ள நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 20 வீதமானவர்கள் கடன் அட்டை மூலம் பெற்றுக் கொள்ளும் கடன் தொகை அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வெளியிடப்பட்ட நுகர்வோர் குறித்த அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் 18 வீதமான கனடியர்கள் அதிகளவு கடனை பெற்றுக் கொள்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார நெருக்கடிகளை ஈடு செய்யும் நோக்கில் அவர்கள் இவ்வாறு கடன் பெறுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.




இந்த கருத்து கணிப்பின் போது தாம், கூடுதலாக கடன் பெற்றுக் கொள்ள உத்தேசித்துள்ளதாக கனடியர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் குறித்த அறிக்கைகள் புள்ளிவிவர தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## கனடா...

கனடாவை அமெரிக்காவுடன் இணைக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்க உள்ள டிரம்ப் சமீபகாலமாக தெரிவித்து வருகிறார்.

இதற்கிடையே கனடா பிரதமர் பதவியில் இருந்து ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகியதையடுத்து தனது கருத்தை ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தி இருந்தார்.

இந்த நிலையில் ட்ரம்பின் கருத்துக்கு கனடா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து கனடாவின் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி கூறுகையில்,

“அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ட்ரம்பின் கருத்துக்கள் கனடாவை ஒரு வலுவான நாடாக மாற்றுவது பற்றிய முழுமையான புரிதல் இல்லாததைக் காட்டுகிறது.

நமது பொருளாதாரம் வலுவாக உள்ளது. எங்கள் மக்கள் வலிமையானவர்கள். அச்சுறுத்தல்களுக்கு நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம்.” - என்றார்.

## ஜஸ்டின்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பது முக்கிய குறையாக பார்க்கப்படுகிறது.

அதேபோல் ஜஸ்டின் ட்ரூடோ அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்து கடந்த மாதம் பதவி விலகிய கிறிஸ்டினா ஃப்ரீலேண்ட் புதிய பிரதமருக்கான போட்டியில் முன்னிணியில் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. எனினும் ஃப்ரீலாண்ட் ராஜினாமா செய்த பிறகு ட்ரூடோ அவரை கடுமையாக விமர்சித்ததை சிலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

அத்துடன், இந்திய வம்சாவளியை சேர்ந்தவரும் தமிழகத்தை பூர்விகமாகக் கொண்டவருமான அனிதா ஆனந்த் அந்நாட்டின் அடுத்த பிரதமராக பதவியேற்க வாய்ப்பிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இப்போதைய சூழலில் கனடா போக்குவரத்துத் துறை அமைச்சரும் லிபரல் கட்சியின் மூத்த தலைவருமான அனிதா ஆனந்த் முன்னணியில் உள்ளார். இவரது தந்தை ஆனந்த் தமிழகத்தை பூர்விகமாகக் கொண்டவர். தாய் சரோஜ் ராம் பஞ்சாபை சேர்ந்தவர் ஆவர்.

மற்றொரு சாத்தியமான வேட்பாளராக புதிய நிதி அமைச்சர் டொமினிக் லெப்லாங்க் கருதப்படுகிறது. முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் ட்ரூடோவின் நெருங்கிய நண்பருமான டொமினிக் லெப்லாங்க் சமீபத்தில் டொனால்ட் டிரம்ப் உடனான இரவு விருந்தில் ஜஸ்டின் ட்ரூடோவுடன் இணைந்து பங்கேற்றார். ட்ரூடோ குழந்தையாக இருந்தபோது லெப்லாங்க் ட்ரூடோவின் குழந்தை பராமரிப்பாளராக இருந்துள்ளார். எனினும் ஜனவரி 20 ஆம் ஆண்டு டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்பதற்கு முன் கனடாவின் புதிய பிரதமர் பதவியேற்பு நிகழாது என கூறப்படுகிறது.




# கனடா பிரதமரை பெண்ணே என கிண்டல் செய்தார் எலோன் மஸ்க்

அமெரிக்காவுடன் கனடாவை இணைப்பது தொடர்பாக டொனால்ட் ட்ரம்பின் சர்ச்சையான கருத்து தொடர்பில், கனடா பிரதமர் ஜஸ்டின் ரூட்டோவை எலோன் மஸ்க் பெண்ணே என கிண்டலடித்துள்ளார்.

கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக இணைக்க முனைப்பு காட்டி வரும் ட்ரம்ப் அதற்காக அந்நாட்டின் மீது பொருளாதார அழுத்தத்தை கொடுப்பேன் என்றும் அச்சுறுத்தியுள்ளார்.

அமெரிக்கக் கொடியால் வரையப்பட்ட இரு நாடுகளின் ஒருங்கிணைந்த வரைபடத்தையும் அவர் பகிர்ந்துள்ளார்.

இந்நிலையில் இதற்கு பதிலடி கொடுத்துள்ள கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ‘கனடாவை அமெரிக்காவுடன் இணைக்க வாய்ப்பில்லை’ என தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதனையடுத்து, ஜஸ்டின் ட்ரூடோவின் இந்த எக்ஸ் பதிவிற்கு எலோன் மஸ்க் கிண்டலாக பதில் அளித்துள்ளார். அதில், “பெண்ணே, இனிமேல் நீங்கள் கனடாவின் ஆளுநராக இருக்க போவதில்லை. ஆகவே நீங்கள் என்ன சொன்னாலும் பரவாயில்லை.” என்று பதிவிட்டுள்ளார்.

கனடா பிரதமராக கடந்த 9 ஆண்டுகள் பதவி வகித்து வந்த ஜஸ்டின் ட்ரூடோ தனது பிரதமர் பதவியிலிருந்து விலகப்போவதாக ஜனவரி 6 இல் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடா பிரதமரின் பதவி விலகல் பின்னணியில் மோடி அரசாங்கம்?

இந்தியாவின் மீது கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கொண்ட மோதல் நிலையே அவரின் பதவி விலகலுக்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரதிய ஜனதா கட்சியின் உறுப்பினர்கள் ஜஸ்டின் ட்ரூடோவின் பதவி விலகலை தற்போது கொண்டாடி வரும் நிலையில், காலிஸ்தானியர்களை ஆதரித்தமையும், நரேந்திர மோடி அரசின் மீது வெளிப்படுத்திய மோதல் போக்கும் இதற்கு காரணம் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவுடன் ஜஸ்டின் ட்ரூடோ மோதிய நிலையில், தற்போது அவரின் பதவிக்கே அது சிக்கலாகி உள்ளதாக கூறப்படுகிறது.

கனடாவில் சீக்கியத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் மாதம் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இந்திய அரசாங்கம் இருக்கலாம் என ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார்.

இது தொடர்பாக அதிர்ச்சி அளிக்கும் முறைபாடுகளை அவர் வெளிப்படுத்தினார்.

கனடாவில் இருக்கும் காலிஸ்தானியர்களின் வாக்கு வங்கியை குறிவைத்து ட்ரூடோ இதனை செய்துள்ளார் என பாரதிய ஜனதா கட்சி குற்றம் சுமத்துகின்றது.



அவர் இந்தியாவுடன் மோதல் போக்கை கடைப்பிடித்தது அவருக்கே உட்கட்சி ரீதியாக பிரச்சினையாக மாறிமையை கடந்த கால கனடாவின் அரசியல் நிலைப்பாடுகள் எடுத்து காட்டுகின்றன.

சீன் கேசி மற்றும் கென் மெக்டொனால்ட் உட்பட பல உயர்மட்ட லிபரல் கட்சி எம்.பி.க்கள், ட்ரூடோவின் தலைமையின் மீதான அதிருப்தியை நேரிடியாக வெளிப்படுத்தினர்.

அவர்கள் நேரடியாக ட்ரூடோ மீது வெளிப்படையாக விமர்சனங்களை முன்வைத்தனர்.

20 இற்கும் மேற்பட்ட லிபரல் எம்.பி.க்கள் அவரை பதவி விலகக் கோரிய உறுதிமொழியில் கையெழுத்திட்டு, எதிர்ப்பை பதிவு செய்தனர்.

நாட்டின் நிதி பிரச்சினைகளை ட்ரூடோ கவனிக்க தவறிவிட்டார் என்று அவர் மீது நேரடியாக முறைபாடுகள் முன்வைக்கப்பட்டன.

முன்னதாக அந்நாட்டின் நிதிய மைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலாண்ட் திடீரென பதவி விலகியதை தொடர்ந்து அங்கே நிதி நிர்வாகம் தொடங்கி கடன் பிரச்சனை வரை பல விடயங்கள் தீவிரம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.